# 2010ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்புச் சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 44/2010)**

(2023, அக்டோபர் 31 அன்று )இருந்தவாறு

# The Chennai Unified Metropolitan Transport Authority Act, 2010

**(Tamil Nadu Act No.44 of 2010)**

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2010ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 44/2010)

பிரிவு பொருளடக்கம்

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.
3. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பை நிறுவுதல்.
4. அதிகாரஅமைப்பில் எவரெவர் அடங்கியிருப்பர்.
5. அதிகாரஅமைப்பின் உறுப்பினர் நிலைக்கான தகுதிக்கேடு.
6. பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்.
7. அதிகாரஅமைப்பின் உறுப்பினர் நிலையிலிருந்து அகற்றுதல்.
8. தற்காலிகக் காலிப்பணியிடத்தை நிரப்புதல்.
9. அதிகாரஅமைப்பின் உறுப்பினர் செயலாளர் மற்றும் பணியாளர்கள்.
10. அதிகாரஅமைப்பின் அலுவல் பணிகள்.
11. இணங்கி நடப்பதிலிருந்து விதிவிலக்கு.
12. அதிகாரஅமைப்பின் கூட்டங்கள்.
13. அதிகாரஅமைப்பின் நடவடிக்கைகள்.
14. ஒப்படைவுகள்.
15. அதிகாரஅமைப்பின் ஆலோசகர்களை நியமித்தல்

.

16. அதிகாரஅமைப்பின் வரவு செலவுத் திட்டம்.

17. அதிகாரஅமைப்பின் நிதிகள்.

18. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.

19. ஆண்டறிக்கை.

20. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

21. அதிகாரஅமைப்பின் நடவடிக்கைகள் இயலாமை காரணமாக செல்லத்தகாததாக ஆகுதல் கூடாது.

22. அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பொது ஊழியர்களாக இருப்பர்.

23. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

24. ஒழுங்குவிதிகளைச் செய்வதற்கு அதிகாரஅமைப்புக்கு உள்ள அதிகாரங்கள்.

25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

26. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 2010ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்புச் சட்டம் தமிழ்நாடு சட்ட எண் 44/2010

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**சென்னைப் பெருநகர திட்டப் பகுதிக்காக ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பை நிறுவுவதற்காகவும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதன் இடைவிளைவான விவரங்களுக்காகவும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் போக்குவரத்து அமைப்பைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் மேலாண்மை செய்தல் உள்ளிட்ட முகவாண்மைகள் பல இருப்பதாலும்;

அத்தகைய முகவாண்மைகளுக்கு இடையேயான செயற்பாட்டை உரியவாறு ஒருங்கிணைத்து முறைப்படுத்துவது ஏற்கனவே இருக்கிற உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்பாட்டிற்கான வளவசதிகளையும் பயன்படுத்தும் பொருட்டு தேவையாக இருப்பதாலும்;

எனவே, தற்போது, மேற்சொன்ன நோக்கங்களுக்கான ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பை நிறுவுவது என மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டச் சட்டம் பின்வருமாறு:—

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.—** (1) இந்தச் சட்டம், 2010ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, சென்னைப் பெருநகர திட்டப் பகுதி முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கை மூலமாகக் குறிப்பிடக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள் வரையறைகள்.—** இந்தச் சட்டத்தில் தறுவாய், வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) "அதிகாரஅமைப்பு" என்பது, பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பு எனப் பொருள்படும்;

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(c) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(d) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களும், சொற்றொடர்களும், 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்

ஊரமைப்புச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 35/1972) அதற்கு குறிப்பிடப்பட்டுள்ள அதே பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

**3. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பை நிறுவுதல்.–** (1) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பு என்ற பெயரால் ஓர் அதிகாரஅமைப்பு நிறுவப்படுதல் வேண்டும்.

(2) அந்த அதிகாரஅமைப்பு நிலையான வழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்ட ஒரு கூட்டுருமமாக இருக்கும் மற்றும் மேற்சொன்ன பெயரால், வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

**4. அதிகாரஅமைப்பில் எவரெவர் அடங்கியிருப்பர்.–** (1) அதிகாரஅமைப்பு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்களாவர்,–

[1][(a) முதலமைச்சர், பதவி வழித் தலைவராக இருப்பார்;

(b) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையைப் பொறுப்பில் கொண்ட அமைச்சர், பதவி வழித் துணைத் தலைவராக இருப்பார்;

---

1. 2020ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு(திருத்தச்) சட்டத்தின் (23/2020) பிரிவு 2 இன்படி மாற்றாக அமைக்கப்பட்டது.

(c) போக்குவரத்து துறையைப் பொறுப்பில் கொண்ட அமைச்சர், பதவி வழி;

(cc) அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி;

(ccc) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர், பதவி வழி;

(d) போக்குவரத்துத் துறையின் அரசு செயலாளர், பதவி வழி ;

(e) நிதித்துறையின் அரசு செயலாளர், பதவி வழி;

(f) வீட்டுவசதி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர், பதவி வழி;

(g) நெடுஞ்சாலைகள் துறையின் அரசு செயலாளர், பதவி வழி;

(h) உள் துறையின் அரசு செயலாளர், பதவி வழி;

(i) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலாளர், பதவி வழி;

(j) சென்னை பெருநகர காவல் ஆணையர், பதவி வழி;

(k) சென்னை மாநகராட்சியின் ஆணையர், பதவி வழி;

(l) போக்குவரத்து ஆணையர், பதவி வழி;

(m) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர், பதவி வழி;

(n) சென்னை, தென்னக இரயில்வே பொது மேலாளர், பதவி வழி;

(o) (சென்னை), தென்னக இரயில்வேயின், சென்னைக் கோட்டத்தின், கோட்ட இரயில்வே மேலாளர், பதவி வழி;

(p) (சென்னைப்) பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர், பதவி வழி;

(q) சென்னையிலுள்ள சென்னை மெட்ரோ இரயில் (Chennai Metro Rail Ltd) மேலாண்மை இயக்குநர், பதவி வழி;

(r) அரசால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வாகன இயக்கம் மற்றும் போக்குவரத்து வல்லுநர் ஒருவர்

(2) அதிகாரஅமைப்பு, வகுத்துரைக்கப்படும் நடைமுறைகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மூன்றிற்கு மேற்படாத கூடுதல் உறுப்பினர்களை இசைந்து தெரிவு செய்யலாம்.

(3) அதிகாரஅமைப்பின் தலைவர் வராமை, நோய், அல்லது பிற காரணம் எதனாலும் பதவிப் பணிகளை ஆற்ற இயலாதபோது, தலைவர் அவருடைய பதவிப்பணிகளை பொறுப்பேற்றுக் கொள்கின்றவரை, [1][துணைத்தலைவர்], தலைவரின் பதவிப்பணிகளைப் புரிதல் வேண்டும்.

---

1. 2020ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பு (திருத்தச்) சட்டத்தின் (23/2020) பிரிவு 2 இன்படி மாற்றாக அமைக்கப்பட்டது.

**5. அதிகாரஅமைப்பின் உறுப்பினர் நிலைக்கான தகுதிக்கேடு.–** நபர் ஒருவர்,–

(a) அவர் மனச் சீர்கேடு உடையவராய் இருந்தால்;

(b) அவர் நொடிப்பு நிலையர் என நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்காக விண்ணப்பம் செய்தவராக இருந்தால் அல்லது விடுவிப்பு பெறாத ஒரு நொடிப்பு நிலையராக இருந்தால்;

(c) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கிய குற்றச் செயல் எதற்காகவும் சட்டம் எதன்படியும் சிறைத்தண்டனை விதித்துத் தண்டனை அளிக்கப் பெற்றிருந்து, அந்தத் தண்டனை நீக்கம் செய்யப்படாமலிருந்து, அந்தத் தண்டனைக் காலம் முடிவடைந்த தேதியிலிருந்து ஐந்தாண்டு காலஅளவு முடிவடையாமல் இருந்தால்;

(d) வகுத்துரைக்கப்படும் பிற தகுதிக்கேட்டிற்கு உள்ளாகி இருந்தால்,

அவர் அதிகாரஅமைப்பின் ஓர் உறுப்பினராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது இசைந்து தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராவார்.

**6. பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்.–** (1) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் மூன்று ஆண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் கூடுதலாக மூன்று ஆண்டுக் காலத்திற்கு மீண்டும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதி உடையவராவார்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக ஓர் ஆண்டிற்குக் குறையாத ஒரு காலஅளவிற்கு ஒரு தற்செயல் காலிப்பணியிடத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராகப் பதவி வகித்திருந்த நபர் ஒருவர், முழுக் காலஅளவாகிய மூன்று ஆண்டு கால அளவிற்கு பதவி வகித்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், அரசுக்கு முகவரியிட்டு தம் கைப்பட எழுதுவதன் மூலமாக தமது பதவியினை விட்டு விலகலாம். ஆனால், அவர், அவருடைய பதவி விலகல் அரசினால் ஏற்கப்படுகின்ற வரையில் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**7. அதிகாரஅமைப்பின் உறுப்பினர் நிலையிலிருந்து அகற்றுதல்.–** பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட

உறுப்பினர் ஒருவர், பதவிக்குப் பொருத்தமற்றவராக இருக்கிறார் அல்லது அவரது அகற்றத்தை விரைவுபடுத்தக்கூடிய தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றத்தை செய்தவராக இருக்கிறார் என்பதாக அரசுக்குத் தோன்றுமானால், அரசானது, அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருக்கு, காரணம் காட்டுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளித்த பின்பு ஆணை மூலமாக, அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

8. **தற்காலிகக் காலிப்பணியிடத்தை நிரப்புதல்.–** பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவியிடத்தில், இறப்பு, பதவி விலகல், அகற்றுதல் காரணமாக அல்லது பிறவாறு, தற்செயல் காலிப்பணியிடம் ஒன்று ஏற்படுமானால், அந்தக் காலிப்பணியிடம் கூடிய விரைவில் அரசினால் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவர் எவருடைய இடத்தை நிரப்புகிறாரோ அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருக்கக்கூடிய அந்த எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

9. **அதிகாரஅமைப்பின் உறுப்பினர் செயலாளர் மற்றும் பணியாளர்கள்.–** (1) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை நகர்ப்புற திட்டமிடுபவர் (போக்குவரத்து), அதிகாரஅமைப்பின் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

(2) அதிகாரஅமைப்பானது, அதன் அலுவல் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக, அது தேவை எனக் கருதுகிற எண்ணிக்கையில் அலுவலர்களையும், பணியாளர்களையும் அமர்த்தலாம்.

(3) அதிகாரஅமைப்பின் உறுப்பினர் செயலாளர், அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**10. அதிகாரஅமைப்பின் அலுவல் பணிகள்.–** (1) அதிகாரஅமைப்பானது, பெருமளவில் பொதுப் பயணிகளுக்கான போக்குவரத்து அமைப்புகளை மேம்படுத்துவது, சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் சிறப்புத் தன்மையுடைய குறிப்பிட்ட சில வாகன இயக்கம் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்புகளைச் செயல்படுத்துவதோடு கூட, அவற்றின் செயல்பாடுகளை முறைப்படுத்துவது உள்ளிட்ட, பல்வேறுபட்ட வாகன இயக்கம் மற்றும் போக்குவரத்து திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணித்தலும், ஒருங்கிணைத்தலும், மேம்படுத்துதலும், மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பானது, போக்குவரத்துப் பகுதிகளில் ஒருங்கிணைக்கும் அதிகாரஅமைப்பாகச் செயல்படுதல் வேண்டும்.

(3) அதிகாரஅமைப்பானது, சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் போக்குவரத்தைப் பாதிக்கக்கூடிய விவரங்களின்மீது முடிவுகளை எடுத்தல் வேண்டும் மற்றும்

விரிவான போக்குவரத்துத் திட்டத்தின் ஒட்டு மொத்தத் திறனை திசை மாற்றும் விதத்தில் முகவாண்மைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் எதனாலும் நடவடிக்கைகள் எவையும் தொடங்கப்படாதிருப்பதை மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (1)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இந்த அதிகாரஅமைப்பானது,–

(1) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை கலந்தாய்வு செய்து பெருந்திட்டத்தில் பெருமளவிலான பொதுப் பயணிகள் போக்குவரத்து முறைகள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு அனைத்தையும் திட்டமிடுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான போக்குவரத்துத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அந்தந்தப் போக்குவரத்து முகவாண்மைகள் மூலமாக அவை செயற்படுத்தப் படுவதற்குப் பரிந்துரைத்தல் வேண்டும்.

(2) சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் வாகன இயக்கம் மற்றும் போக்குவரத்து நிலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு இணங்க விரிவான போக்குவரத்துத் திட்டத்தைக் காலத்திற்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்தல் வேண்டும்.

(3) விரிவான போக்குவரத்துத் திட்டத்தை கண்காணித்தலும் ஒருங்கிணைத்தலும் அது செயற்படுத்தப்படுவதை மதிப்பீடு செய்தலும் வேண்டும்.

(4) சிறப்புத் தன்மையுடைய வாகன இயக்கம் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்புகளைத் திட்டமிட்டு செயல்படுத்துதல் வேண்டும்.

(5) பொதுமக்களுக்குத் தடையற்ற பயண வசதியை அளிக்கும் பொருட்டு, தடங்களைக் குறித்தல், பட்டியலிடுதல், கூடுதல் கிளைத் தடங்களை இயக்குதல் மற்றும் ஒன்றிணைந்த அல்லது பொதுப்பயணச்சீட்டு முறைக்கு ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக பெருமளவில் பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(6) சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் பயணத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பெருமளவிலான பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளின் சிறப்பையும் திறனையும் அதிகரிக்கும் பொருட்டான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(7) தடங்களை காலமுறைதோறும் ஆய்வு செய்வதன் மூலமாக பெருமளவிலான பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளுக்கான தடத்திற்கான திட்டத்தை முறைப்படுத்துதல் வேண்டும்.

(8) அரசின் ஒப்புதலுடன், பெருமளவிலான பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும்

துணைப் போக்குவரத்து முறைகளுக்கான கட்டணங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(9) புத்தாக்க முறைகளையும், செயல் முறைகளையும் ஏற்படுத்துதல், அவை குறித்து விவாதித்தல் மற்றும் கலந்தாய்வு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய முறைகளையும் செயல்முறைகளையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

(10) பெருமளவிலான பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகளின் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளின் செயற்பாட்டினை அல்லது திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான படிப்புகளையும் ஆய்வுகளையும் தொடங்குதலும் தரவுத்தளம் ஒன்றைப் பேணி வருதலும் வேண்டும்.

(11) போக்குவரத்து அமைப்பை மேம்படுத்துவதற்காக, தேவைப்படுகிற இடத்தில் எல்லாம், இருப்புப்பாதைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் பொறுத்து, மைய அரசுக்குப் பரிந்துரைகள் செய்தல் வேண்டும்.

(12) கட்டமைப்புத் தரநிலைகள், பேணுதல் மற்றும் பல்வேறு குடிமை முகவாண்மைகளால் பின்னிட்ட சாலைப் பாதுகாப்பு தணிக்கை உள்ளிட்ட, விபத்துக்களைக் குறைப்பதற்கு உதவி செய்கிற மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பிற பொருள்கள் குறித்த நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(13) சாலைப் பாதுகாப்புக் குழு ஒன்றை மேலாண்மை செய்து வருதல் வேண்டும்.

(14) முகவாண்மைகளுக்கு இடையேயான வேண்டுகோள்கள் இணக்கமாய்த் தீர்க்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும் மற்றும் அந்த முகவாண்மைகளுக்கு இடையே ஏற்படக்கூடிய வேறுபாடுகளைத் தீர்த்தல் வேண்டும்.

(15) விரிவான போக்குவரத்து திட்டத்திற்குள் அடங்காத, ஆனால் பெருமளவிலான பொதுப்பயணியர் போக்குவரத்து முறைகள் தொடர்பான தொடர் முகவாண்மைகளின் பிற செயற்படும் திட்டம் எதனையும் மற்றும் தொடர்புடைய உள் கட்டமைப்பினையும் சென்னைப் பெருநகர் திட்டமிடல் பகுதியில் ஒன்று சேர்த்து ஒருங்கிணைப்பதற்கான மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(16) விரிவான போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தொடர் முகவாண்மைகளுக்கு நிதிகளை அளிப்பதற்காக ஆண்டு வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்புதல் வேண்டும்.

(17) பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து அமைப்பை திட்டமிடுதல் குறித்து அரசால் அதனிடம் ஒப்படைக்கப்படும் பிற அலுவல் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

**11. இணங்கி நடப்பதிலிருந்து விதிவிலக்கு.–** அரசானது, அது பொருத்தம் எனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பொது அல்லது தனி ஆணை மூலமாக அதிகாரஅமைப்பின் பரிந்துரைகளில் எவற்றிற்கும் இணங்கி நடப்பதிலிருந்து போக்குவரத்து முகவாண்மை எதற்கும் விலக்களிக்கலாம்.

**12. அதிகாரஅமைப்பின் கூட்டங்கள்.–** அதிகார அமைப்பானது, தேவைப்படுகிற போதெல்லாம் கூடுதல் வேண்டும் மற்றும் ஒழுங்கு விதிகளில் வகுத்துரைக்கப்படும் நடைமுறை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்:

**வரம்புரை:** அதிகாரஅமைப்பானது, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

**13. அதிகாரஅமைப்பின் நடவடிக்கைகள்.–** (1) அதிகாரஅமைப்பானது, அதிகாரஅமைப்பின் கூட்டங்களுக்கான நேரம் மற்றும் இடங்கள், அந்த கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை, அதிகாரஅமைப்பின் கூட்டங்களில் அலுவல் நடத்தும் முறை தொடர்பான பொருள்களை உள்ளடக்குகின்ற அதன் நடவடிக்கைகளை நடத்துவதற்கான மற்றும் அதன் அலுவல் பணிகளைப் புரிதலுக்கான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு அதிகாரம் உடையதாகும்.

(2) அதிகாரஅமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இருக்கின்ற நிகழ்வில், பெரும்பான்மையினரின் கருத்தே மேலோங்கி நிற்கும்; மற்றும் அதிகாரஅமைப்பின் கருத்து

பெரும்பான்மையினரின் கருத்துக்களாகவே வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரஅமைப்பின் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பானது, அதிகாரஅமைப்பின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்:

**வரம்புரை:** நெருக்கடி நேரங்களில், அதிகார அமைப்பானது, உறுப்பினர்களுக்குச் சுற்றோட்டம் விடுவதன் மூலமாகப் பொருள் எதனையும் தீர்மானிக்கலாம்.

(4) அதிகாரஅமைப்பின் தலைவர், அதிகார அமைப்பின் கூட்டம் ஒன்றிற்கு தலைவர் பணிக்கக்கூடிய நேரத்திலும் இடத்திலும் கூடுமாறு அழைப்பு விடுக்கும்படி உறுப்பினர் செயலாளரை அறிவுறுத்தலாம்.

(5) அதிகாரஅமைப்பின் முடிவுகள், பணிப்புரைகள் மற்றும் பரிந்துரைகள் அனைத்தும் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்.

**14. ஒப்படைவுகள்.–** அதிகாரஅமைப்பானது, பொது அல்லது தனி ஆணை மூலமாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தேவை எனக் கருதும் தன்னுடைய அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகளில் எதனையும், அதிகாரஅமைப்பின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரிடமும் ஒப்படைவு செய்யலாம்.

**15. அதிகாரஅமைப்பின் ஆலோசகர்களை நியமித்தல்.–** அதிகாரஅமைப்பானது, அதிகாரஅமைப்பால் வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அதனுடைய அலுவற்பணிகளைப் புரிகையில், அதிகாரஅமைப்புக்கு உதவுவதற்குத் தேவைப்படுகிற ஆலோசகர்களை அவ்வப்போது அமர்த்துவதற்கு உரிமை உடையதாகும்.

**16. அதிகாரஅமைப்பின் வரவு செலவுத் திட்டம்.–** அதிகாரஅமைப்பானது, அடுத்த நிதியாண்டினைப் பொறுத்து, மதிப்பீடு செய்யப்பட்ட வரவையும், செலவினத்தையும் காட்டுகிற வரவு செலவுத் திட்டம் ஒன்றை, வகுத்துரைக்கப்படும் படிவத்திலும், நேரத்திலும் தயாரித்தல் வேண்டும்; மற்றும் அந்த வரவு செலவுத் திட்டத்தின் நகல் ஒன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**17. அதிகாரஅமைப்பின் நிதிகள்.–** (1) அதிகார அமைப்பானது தனக்கெனச் சொந்த நிதியைக் கொண்டிருக்கும்; மற்றும் அவ்வப்போது அதற்கு அரசால் செலுத்தப்படக்கூடிய தொகைகள் மற்றும் அதிகாரஅமைப்பின் வரவுகள் அனைத்தும் அந்த நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(2) அரசானது, ஒவ்வொரு நிதியாண்டிலும், அதிகார அமைப்பு செயல்படுவதற்காகத் தேவை எனக் கருதும் தொகைகளை அதிகாரஅமைப்பிற்கு வழங்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி அல்லது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அதிகாரஅமைப்பால்

செய்ய நேர்ந்த செலவினங்கள் அனைத்தும் மேற்சொன்ன நிதியிலிருந்து செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அந்தச் செலவினங்கள் செய்யப்பட்ட பிறகு, எஞ்சியுள்ள உபரித் தொகை எதுவும், வகுத்துரைக்கப்படும் முறையில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**18. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.–** (1) அதிகாரஅமைப்பின் கணக்குகள் வகுத்துரைக்கப் படக்கூடிய முறையிலும் படிவத்திலும் வைத்து வரப்படுதல் வேண்டும். அதிகாரஅமைப்பானது, வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக் கணக்குகளின் விவர உரை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பின் கணக்குகள், இதன் பொருட்டு அரசு நியமிக்கும் தணிக்கையாளரால் ஓராண்டில் குறைந்தது ஒருமுறையாவது தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி அமர்த்தப்பட்ட தணிக்கையாளர், தணிக்கை நோக்கங்களுக்காக, வகுத்துரைக்கப்படும் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைப் பெற்றிருப்பார்.

(4) உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதன் அச்சடிக்கப்பட்ட நகல் ஒன்றை, ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும் மற்றும் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்காக அந்த அறிக்கையை அதிகாரஅமைப்பின் முன்பு வைத்தல் வேண்டும்.

(5) அதிகாரஅமைப்பானது, தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்படும் குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனடியாகத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் உறுதிச் சான்றிடப்பட்ட அதிகார அமைப்பின் கணக்குகள், அதன் பேரிலான அதிகார அமைப்பின் குறிப்புரைகளுடன் தணிக்கை அறிக்கையும் சேர்த்து, வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள் அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) அரசானது, ஆணை மூலமாக, அந்தத் தணிக்கை அறிக்கையில் வெளியிடப்பட்ட குறைபாடுகள், எவையேனும் இருப்பின், அவற்றைத் தீர்வு செய்வதற்காக, அதில் குறிப்பிடப்படக்கூடிய காலஅளவிற்குள், அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நடவடிக்கையை எடுக்குமாறு அதிகாரஅமைப்பைப் பணிக்கலாம் மற்றும் அந்த அதிகார அமைப்பு, அந்தப் பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

19. **ஆண்டறிக்கை.–** அதிகாரஅமைப்பானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதிக்குப் பிறகு, கூடிய விரைவில், முந்தைய நிதியாண்டின் போதான தன்னுடைய நடவடிக்கைகள் குறித்த, விவரங்களை அளிக்கின்ற அறிக்கை ஒன்றை வகுத்துரைக்கப்படும் தேதிக்கு முன்பு வகுத்துரைக்கப்படும் படிவத்தில் தயாரித்து அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும் மற்றும் அந்த அறிக்கையானது அடுத்த நிதியாண்டின் போது அதிகார அமைப்பால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள்

ஏதேனும் இருந்தால் அவை குறித்த விவரங்களை அளித்தல் வேண்டும் மற்றும் அரசானது, அதனைப் பெற்ற பிறகு கூடியவிரைவில், அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றும் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். அந்த ஆண்டறிக்கையின் நகல் ஒன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**20. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.**–அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என்று தான் கருதும் பணிப்புரைகளை வழங்கலாம்; மற்றும் அந்த அதிகாரஅமைப்பு, அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

**21. அதிகாரஅமைப்பின் நடவடிக்கைகள் இயலாமை காரணமாக செல்லத்தகாததாக ஆகுதல் கூடாது.**–அதிகாரஅமைப்பானது, உறுப்பினர் நிலையில் காலிப்பணியிடம் எதுவும் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருந்தபோதிலும் செயற்படுவதற்கு அதிகாரம் உடையதாக இருக்கும் மற்றும் அதிகார அமைப்பின் நடவடிக்கைகள், உறுப்பினராக இருப்பதற்கு உரிமையில்லாத எந்த நபரும், அதிகாரஅமைப்பின் நடவடிக்கைகளில் வந்திருந்தார், வாக்களித்தார் அல்லது பிறவாறு பங்கேற்றுக் கொண்டார் என்றபோதிலும் செல்லும் தன்மையுடையதாகும்.

**22. அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பொது ஊழியர்களாக இருப்பர்.–** அதிகார அமைப்பின் தலைவர், [1][துணைத் தலைவர்], உறுப்பினர்கள், உறுப்பினர் செயலாளர் மற்றும் பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்தச் சட்டத்தின் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குவிதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனின் வகைமுறைகளில் எதனையும் ஒட்டி செயற்படுகிறபோது அல்லது செயற்படுவதாகப் புலப்படுகிறபோது, இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**23. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தினை அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரை எதனையும் ஒட்டி, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து, அரசுக்கு, அதிகாரஅமைப்புக்கு அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும் அல்லது அரசின் அல்லது அதிகார அமைப்பின் பணிப்புரையின் கீழ் செயற்படுகிற அலுவலர் அல்லது பணியாளர் அல்லது நபர் எவருக்கும் எதிராக, உரிமைவழக்கு எதுவும் தொடரப்படுதல் கூடாது அல்லது

---

1. 2020ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகாரஅமைப்பு (திருத்தச்) சட்டத்தின் (23/2020) பிரிவு 3இன்படி மாற்றாக அமைக்கப்பட்டது.

பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் கூடாது.

**24. ஒழுங்குவிதிகளைச் செய்வதற்கு அதிகார அமைப்புக்கு உள்ள அதிகாரங்கள்.–** (1) அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி, தன் அலுவற் பணிகளை நிறைவேற்றுவதற்காக, இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கிய ஒழுங்குவிதிகளை அரசின் முன்அனுமதியுடன் செய்யலாம்.

(2) ஒழுங்குவிதி அல்லது அதன் நீக்கம் அல்லது மாற்றம் எதுவும், அவை, அரசினால் ஒப்புதல் அளிக்கப்படும் வரையில் செயல் வடிவம் கொள்ளுதல் கூடாது.

(3) அரசானது, அறிவிக்கை மூலமாக, இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்குவிதி எதனையும் நீக்கம் செய்யலாம் மற்றும் அதன் பேரில், அந்த ஒழுங்குவிதி செயல்வடிவம் பெற்றிருப்பது அற்றுப்போகும்.

**25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் அல்லது பிரிவு 26இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்தப் பேரவை

அத்தகைய விதி அல்லது ஆணை எதிலும் மாற்றம் எதனையும் செய்யுமானால் அல்லது அந்த விதி செய்யப்படுதல் கூடாது அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதல் கூடாது எனப் பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு அந்த விதி அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப செயல்வடிவம் பெறாது போகும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**26. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல் வடிவம் அளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத ஆணை மூலமாக, அந்த இடர்ப்பாட்டினை நீக்கம் செய்கின்ற நோக்கத்திற்குத் தேவையானது அல்லது உகந்தது எனத் தோன்றுகிற எதனையும் செய்யலாம்:

**வரம்புரை:** அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.